2017-ம் வருடம் ஜனவரி.23-ம் தேதி காலை 11.00மணிக்கு நடைபெற்ற கூட்ட நடவடிக்கையின் உண்மைநகல்:
முன்னிலை: திரு.எல்.குமார்.பி.இ.
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

----------

1. ஆம்பூர் நகராட்சி பகுதியில் மத்திய அரசு திட்டமானஅம்ருத் (AMRUT) திட்டத்தின்கீழ் பாதாள சாக்கடை திட்டத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.129.07கோடிக்கு 6வது மாநில தொழில்நுட்ப குழுவால் 12.12.2017ம் தேதியன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் அங்கீகாரம் அளித்து மாநில உயர்மட்ட வழிகாட்டும் குழுவிற்கு பரிந்துரை செய்யப்பட்டது. மேற்படி 6வது மாநில தொழில்நுட்ப குழுவால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட தொகை ரூ.129.07கோடி மதிப்பீட்டில் திட்டத்தினை செயல்படுத்தவும் 22,000 எண்ணிக்கை பாதாள சாக்கடை இணைப்புகளை வழங்கவும் மாநில உயர்மட்ட வழிகாட்டும் குழுவால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மத்திய அரசு, மாநில அரசு மற்றும் நகராட்சி பங்குத் தொகை விவரங்கள் கீழ்க்கண்ட விகிதப்படி செயல்படுத்தவும், மேற்படி திட்டத்தில் வழங்க உத்தேசிக்கப்படவுள்ள 22,000 எண்ணிக்கை இணைப்புகளுக்கு கீழ் குறிப்பிட்டுள்ள விவரப்படி கட்டணம் மற்றும் டேவணித் தொகை வசூலிக்கவும் அங்கீகாரம் கோரப்படுகிறது. (ரூ.கோடியில்)

| வ.எ | திட்டத்தின்பெயர் | திட்டத்தின் மொத்த மதிப்பீட்டு தொகை | மத்திய அரசு பங்குத் தொகை | மாநில அரசு பங்குத் தொகை | நகராட்சி பங்குத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | பாதாள சாக்கடை திட்டம் | 129.07 | 64.54 | 25.81 | 38.72 |

| **Area in Sq.ft** | **Proposed UGD Tariff** | | | |
|---|---|---|---|---|
| | **Residential** | | **Commercial** | |
| | Tariff in Rs. Per month | Deposit in Rs. | Tariff in Rs. Per month | Deposit in Rs. |
| <=500 | 120 | 8000 | 250 | 9000 |
| 500 to 1200 | 200 | 8750 | 330 | 11000 |
| 1200 to 2400 | 250 | 9500 | 400 | 13000 |
| >=2400 | 300 | 10000 | 500 | 15000 |
| Special | 500 | 15000 | 1500 | 100000 |

அலுவலகக்குறிப்பு 6வது மாநில தொழில்நுட்ப குழு மற்றும் மாநில உயர்மட்ட வழிகாட்டும் குழுவால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் மேற்குறிப்பிட்டுள்ளவாறு மத்திய மாநில மற்றும் நகராட்சி பங்குத் தொகை நிதி மூலம் பணியினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தவும் மேற்படி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இணைப்புகளுக்கு மேற்குறிப்பிட்டுள்ள கட்டண விகிதங்களை வசூலிக்கவும் அங்கீகரிக்கலாம்.
ந.க.எண்.1742/2015/இ2
தீர்மான எண்.287: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

2. இந் நகராட்சிக்கு 2017-18-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற சாலைகள் உள்கட்டமைப்பு திட்டத்தின் கீழ், சிமெண்ட் சாலைகள் மற்றும் தார் சாலைகள் அமைத்தல் பணிகளை மேற்க்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 21422/2017/இ3, நாள் 03.10.2017ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில், சிமெண்ட் சாலைகள் மற்றும் தார் சாலைகள் அமைத்தல் பணிகளுக்கு 13.12.2017ல் இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் ஒவ்வொரு சிப்பத்திற்கும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர்களின் தொழில் நுட்ப தகுதியினை ஆய்வு செய்யப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை விவர ஒப்பந்தப் புள்ளிகளை (PRICE BID) 10.01.2018 -ம் தேதி அன்று திறப்பு செய்யப்பட்டது. தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்கள் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்வருமாறு பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| சிப்பம் எண் | பணியின் விவரம் | ஒப்பந்தப் புள்ளி தொகை (ருபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | பெத்லகேம் 7வது குறுக்கு தெரு, பெத்லகேம் 3வதுதெரு,சாமியார்மடம் குறுக்கு தெரு,சாமியார்மடம் டி.வி.டவர்தெரு ,சாய்பாபா கோவில் 1வது,2வது,3வது,4வது,மற்றும் 6வதுதெரு, ராகவேந்திரா கோவில் தெரு, மாதகடுப்பு, கம்பிக்கொல்லை டோபி காலனி,குறுக்கு தெரு,குறுக்கு சந்து மற்றும் மு.க.கொல்லை தெரு ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் கட்டுதல் மற்றும் சிமெண்ட்சாலை அமைத்தல் | 200.00 | 1.திருவாளர்கள். திவாகரன் கன்ஸ்டிரக்சன்ஸ்,<br><br>2. திருவாளர்கள்.எக்சல் என்ஜினியரிங், ஓர்க்ஸ், ஜோலார்பேட்டை. | 4.97% மதிப்பீட்டை விட அதிக<br><br>9.02% மதிப்பீட்டை விட அதிக |
| 2 | விவேகானந்தர் 1வது,2வது தெரு மற்றும் குறுக்கு தெரு,தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியுருப்பு பகுதி ஆகிய தெருக்களில் தார்தளம் அமைத்தல் | 100.00 | 1.திருவாளர்கள்.எக்சல் என்ஜினியரிங், ஓர்க்ஸ், ஜோலார்பேட்டை.<br><br>திருவாளர்கள்.டி.சி.என் கன்ஸ்டிரக்சன்ஸ், | 4.96% மதிப்பீட்டை விட அதிக<br><br>15.74% மதிப்பீட்டை விட அதிக |

மேற்குறிப்பிட்டுள்ள சிப்பம் எண்.1மற்றும் 2ல் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக உள்ளதால், குறைந்த விலைவிகிதம் (NEGOTIATION) வழங்குமாறு கூடுதலில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1018/2017/இ1, நாள்:10.01.2018 மூலம் தெரிவிக்கப்பட்டதில், தற்போது கட்டுமான பொருட்களின் விலை அதிகமாக உள்ளதாலும், வேலையினை செய்யும் பணியாட்களின் கூலித் தொகை அதிகமாக உள்ளதாலும், ஒப்பந்த விலை விகிதத்தை குறைத்து

வழங்க இயலாதநிலை உள்ளது என சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாராகள் தமது 12.01.2018ம் தேதிய கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதை பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அ.2017-18-ஆம் ஆண்டு தமிழ் நாடு நகர்புற சாலைகள் உள்கட்டமைப்பு திட்டத்தின் கீழ், எடுத்துக் கொள்ளப்பட்ட சிப்பம் எண்.1மற்றும் 2-ல் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் மதிப்பீட்டிற்கு கூடுதலாக உள்ளது.மேற்படி பணிகள் திட்டப் பணிகளாக இருப்பதாலும், அரசு நிர்ணயித்துள்ள கால கெடுவிற்குள் பணிகளை முடிக்க வேண்டி இருப்பதாலும், அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும், நகராட்சி பொறியியல் நடைமுறை நூல் பக்கம்.9ல் 2.7.2ல் தெரிவித்துள்ளவாறு, மதிப்பீட்டிற்கு 5சதவீதம் வரை ஒப்பந்தப்புள்ளி கூடுதலாக இருந்தாலும், ஒப்புதல் வழங்கலாம் என குறிப்பிட்டுள்ள காரணத்தை கருத்தில் கொண்டு, மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு மதிப்பீட்டை விட கூடுதலில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்தங்களை அங்கீகரிக்கலாம்.
ஆ. மேற்படி திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாக ஏற்படும் செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.1018/2017/இ1
தீர்மான எண்.288: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

3. இந் நகராட்சியின் 2017-18ம் ஆண்டின் திருத்திய வரவு, செலவு திட்டம் மற்றும் 2018-19ம் ஆண்டிற்கான உத்தேச வரவு, செலவு திட்டம் தயார் செய்து பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு: அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண். 21/2018/பி2
தீர்மான எண்.289: அங்கீகரிக்கப்பட்டது.

4. இந்நகராட்சிக்கு சொந்தமான கஸ்பா-அ பள்ளியில் அறிவு திறன் கொண்ட (Smart Class) அமைக்க தேவையான மின்வசதி செய்தல், பள்ளி முழுதும் வர்ணம் பூசூதல் மற்றும் இதர மராமத்து பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ5.00 லட்சம் மட்டும் அங்கிகாரம் கோரப்படுகின்றது.

மாணவர்களின் கல்வி அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று 05.01.2018-ம் தேதி ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| ஒப்பந்ததாரர் பெயர்<br>திரு/திருமதி | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|
| 1.ஜி.பிரபாகரன்<br>2. எம்.உதயகுமார் | 0.07% மதிப்பீட்டை விட குறைவு<br>1.80% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

அ. மேற்குறிப்பிட்டுள்ள பணியினை கல்வி நிதி தலைப்பின் கீழ் மேற்க்கொள்ளவும், மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை வழங்கியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

ஆ. மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை கருதி, தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும், பணி உத்திரவு வழங்கியமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண். 1479/2017/இ1
தீர்மான எண்.290: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

5. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் வாகனம் எண்.டி.என்.23BP3604ல் ஏற்பட்டுள்ள எஞ்சின் மற்றும் பம்ப் சர்வீஸ் ஆகிய இரு பழுதுகளினால் மேற்படி வாகனம் இயக்கவில்லை.இதனால் பொது சுகாதாரப்பணிகள் பாதிக்கப்படுகின்றன. எனவே மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யும் பணிக்கு அங்கீகாரம் பெற்ற பாநிலட்சுமி மோட்டார்ஸ் ( Ashok Leyland Authorised Service Center ) செங்கிலிகுப்பம், வாணியம்பாடி என்ற டீலரிடம் 09.01.2018ம் தேதியன்று ரூ.52,000/- (ரூபாய் ஐம்பத்தி இரண்டாயிரம் மட்டும்) விலைப்புள்ளி பெறப்பட்டது. மேலும் அவசர அவசியம் கருதி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ய அங்கீகாரம் கோரப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு: 1. பதிவு செய்யலாம். மேற்படி நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்கியமைக்கும் அங்கீகரிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.
ந.க.எண்.15/2018/எச்1
தீர்மான எண்.291: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

5. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருக்களில் சுற்றித்திரியும் நாய்களை பிடித்து கருத்தடை செய்து தடுப்பூசி போட்டு பராமரித்து மீண்டும் பிடித்த இடத்திலேயே விடும் பணிக்கு 09.01.2018ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு.

| வ.எ. | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விலாசம்<br>திருவாளர்கள் | தொகை<br>ரூ |
|---|---|---|
| 1 | Animal Trust India,<br>17/34, Perumal Kovil sreet,<br>West Saidapet, Chennai.15 | 444/- |
| 2 | R.Ravichandiran<br>12, 1st street,<br>Jaberkhanpettai, Chennai. | 450/- |

அலுவலகக்குறிப்பு:இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருக்களில் சுற்றித்திரியும் நாய்களை பிடித்து கருத்தடை செய்து தடுப்பூசி போட்டு பராமரித்து மீண்டும் பிடித்த இடத்திலேயே விடும் பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் உள்ள Animal Trust India, Chennai அவர்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1078/2013/எச்1
தீர்மான எண்.292: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

ஒம்/- எல்.குமார்.பி.இ.
தனி அலுவலர்,
ஆம்பூர் நகராட்சி.

/உண்மைநகல்/
தனி அலுவலர்,
ஆம்பூர் நகராட்சி.